விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 052 வள்ளுவர் ஆண்டு 2054 தை 26 வியாழக்கிழமை (09.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## 13ஐ அமுல்படுத்த வேண்டாம்

### பாராளுமன்றம் முன் அரசியலமைப்பு பிரதியை தீயிட்டு எரித்து பிக்குகள் சண்டித்தனம்



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்து அரசியலமைப்பின் 13ஆவது திருத்தப் பிரதியை பௌத்த பிக்குகள் பாராளுமன்றம் முன் தீயிட்டு எரித்துள்ளனர்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணக் கம்பன்விழா நாளை கோலாகலமாக ஆரம்பம்

### தொடர்ந்து மூன்று நாட்கள் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக் கம்பன் விழா நாளை 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து மூன்று தினங்கள் இடம் 11

## சமஷ்டியை கண்டிப்பாக கொண்டு வருவோம்

### விக்னேஸ்வரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமஷ்டி முறைமையைக் கண்டிப்பாக கொண்டு வருவோம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக் 11

## ஒற்றையாட்சி முறைக்குள்

# உச்ச அதிகாரங்களோடு

# இனப் பிரச்சினைக்கு தீர்வு

### கொள்கைப் பிரகடன உரையில் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

**ஒற்றையாட்சி முறைக்குள் உச்ச அதிகாரங்களோடு இனப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

9வது பாராளுமன்றத்தின் 4வது அமர்வில் கலந்து கொண்டு கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1977ம் ஆண்டு தான் முதல் முறையாக பாராளுமன்றத்திற்கு தெரிவான சந்தர்ப்பத்திலிருந்து 11

## வடக்கில் விசேட அபிவிருத்தித் திட்டம்

### ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்துக்கு விசேட அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப் 11

## பொலிஸ் அதிகாரம் வழங்கப்படாது - ரணில்

(கொழும்பு)

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஆற்றிய கொள்கை 11

## அரசியல் கைதிகள் படிப்படியாக விடுதலை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கைதிகள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவர் என ஜனாதிபதி 02

## வரிக்கொள்கை விரைவில் மறுசீரமைக்கப்படும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

நட்டமடையும் அரச நிறுவனங்களின் சுமையை நாட்டு மக்கள் சுமக்க வேண்டியுள்ளதால் நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதை தவிர மாற்று வழிகள் ஏதும் தற்போது கிடையாது.

வரிக் கொள்கை வெகுவிரைவில் மறு 11

## சிறீதரன் எம்.பி, வேலன் சுவாமிகள் உட்பட 7 பேருக்கு அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணியில் கலந்து கொண்டமை, சட்டவிரோதமானது எனக் குற்றம்சாட்டி, சிறீதரன் எம்.பி, வேலன் சுவாமி உட்பட 7 பேருக்கும் யாழ்ப்பாணப் பொலிஸார் அழைப்பாணை வழங்கியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி ஆரம்பமானது.

குறித்த பேரணியில் கலந்து கொண்டமை சட்ட விரோதமானது 11

## நடுவு நிலை தவறாது நடுநிலை காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய கொள்கை விளக்க உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போன நபர்கள் தொடர்பாக கண்டறிவதற்கான முறைமையினை நாம் முறைமைப்படுத்தி துரிதப்படுத்துவோம்.

பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பெயரில் சிறை வைக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றியும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எந்தவொரு வழக்கு விசாரணையும் இன்றிபல ஆண்டுகளாக அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளார்கள்.

படிப்படியாக இந்த சிறைக் கைதிகளை விடுவிப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். (ம-7)

### நேரடிவரியை அதிகரிப்பதன்மூலம்

# மக்கள் மீதான மொத்தவரி சுமையை குறைக்க முடியும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

நேரடி வரிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் ஒட்டுமொத்த வரிச் சுமையை குறைக்க முடியும் என ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலை தொடர்ந்தால் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிக்க முடியும் எனவும், இந்த ஆண்டு இறுதியில் வட்டி விகிதங்களை குறைக்க முடியும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் தான் பிரபலமடைவதற்காக இந்த பதவியை பெறவில்லை என்றும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீள கட்டியெழுப்ப செயற்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்காக இந்த வருட இறுதிக்குள் பணவீக்க வீதத்தை ஒற்றை இலக்கமாக குறைக்கும் இலக்குடன் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

புதிய வரிக்கொள்கைகளை அறிமுகப்படுத்துவது அரசியல் ரீதியாக விரும்பத்தகாத தீர்மானம் என்றாலும் நாட்டைக் கட்டியெழுப்ப அத்தகைய தீர்மானங்களை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் பலன்களை எதிர்வரும் 2-3 ஆண்டுகளில் மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## ஹெரோயின் போதைப்பொருளுடன் நெல்லியடியில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல்லியடி - இமையாணன் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் இரு இளைஞர்கள் நெல்லியடி பொலிஸ்நிலைய விசேட புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேசங்களை சேர்ந்த 24, 27 வயதான இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து சுமார் 63 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள் இன்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)

# ரணிலின் நரிக்குணமே 13 எதிர்ப்புக்குக் காரணம்

### – ஜே.வி.பி

(கொழும்பு)

ரணிலின் நரிக்குணமே 13வது திருத்தத்தின் எதிர்ப்புக்கு காரணம் என அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று மட்டக்களப்பு கல்லடி தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது. அதன் போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த நரிக்குணமான செயற்பாடுகளுக்கு மக்கள் இடம் அளிக்க வேண்டாம். ரணில் விக்கிரமசிங்க, தற்போது நாட்டில் உள்ள நிலவரங்களை மூடி மறைத்து வேறு பிரச்சினையை மக்கள் மத்தியில் கொண்டு வந்து கலவரத்தை உண்டு பண்ணும் நோக்குடனே செயல்பட்டு வருகின்றார்.

இன்று மதவாதத்தையும் இனவாதத்தையும் முன்னிறுத்தி அரசியல் செய்கின்றார்கள்.

ஆனால் எங்களது அரசாங்கம் ஒன்று வருமாக இருந்தால் நாங்கள் புரையோடிப் போய் கிடக்கின்ற தமிழர்களுக்காக புதியதொரு திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து அனைவருடைய ஒத்துழைப்புடன் அந்த சட்டத்தை நிறைவேற்றுவோம்.

இன்று 13வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதாக கூறுகின்ற ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் 13வது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட போது அவர்கள் கையொப்பமிடவில்லை.

அந்த நேரத்தில் பிரதமராக இருந்தவர் ரணில். ஆனால் தற்போது நாட்டில் ஒரு இனவாதத்தை தூண்டுவதற்காக இன்று 13வது திருத்த சட்டத்தை கையில் எடுத்து நரிக்குணத்தை ஆரம்பித்து இருக்கிறார். இந்த நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒருபோதும் செவிசாய்க்க கூடாது என கேட்டுக்கொள்கின்றேன் என்றார். (ம-7)

## புத்தூரில் விபத்து ரெமிடியஸ் காயம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சட்டத்தரணி ரெமிடியஸ் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றது.

ஸ்கூட்டி மோட்டார் சைக்கிளில் ரெமிடியஸ் பயணித்த போது வீதியின் குறுக்காக நாய் சென்ற போது விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-7)


## பயிற்சியாளர்கள் தேவை

அச்சகம் ஒன்றின் கட்டும் பகுதியில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. வேலை பழக விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம். சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு 25.02.2023ற்கு முன்னதாக கிடைக்க கூடியதாக விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
**செயலாளர்,**
**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை,**
**இல.12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

(C-5929)

## பெண் விற்பனையாளர்கள் தேவை

எமது பிடவை கடைக்கு பிடவை வியாபாரம் செய்வதற்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர்கள் தேவை. தகுந்த சம்பளம், மதிய உணவும் கொடுக்கப்படும்.

**சென்னை பெசன்**
இல.63, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(14552)


# மரண அறிவித்தல்

## திருமதி தங்கராணி தர்மலிங்கம்



மண்ணுலகில் 01.07.1964 விண்ணுலகில் 07.02.2023

நெடுங்கேணி ஒலுமடுவைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி 3ஆம் வாய்க்காலில் வசித்து வந்தவரும் தற்போது தாஸ்நகர் மகாறம்பைக்குளம் வவுனியாவில் வசித்து வந்தவருமான திருமதி தங்கராணி தர்மலிங்கம் அவர்கள் 07.02.2023 கடந்த செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.02.2023 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தாஸ்நகர்,
மகாறம்பைக் குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்

(C-5931)

# 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
10.06.1931



இறைவனடியில்
21.01.2022

மூன்று கோயிலடி உரும்பிராய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவர்

அமரர்

## கணபதி மார்க்கண்டு

ஓராண்டு ஓடிவிட்டது ஐயா, போன
பாதை தெரியவில்லை ஐயா
பின்தொடர்வதற்கு
திரும்பும் இடமெல்லாம் உங்கள்
நினைவுகள் வதைக்குதையா ஆறுதல்
சொல்ல எவரும் இல்லை. துடிக்கிறோம்,
மனம் குமுறுகிறது, கண்ணீர் வழிந்து
ஓடுகிறது, எங்கள் வீட்டு மூன்று
விளக்குகள் அணைந்து விட்டது
இருளில் மூழ்கிவிட்டோம்
விடிவெள்ளியாய் இருந்து ஒளி
தந்து வழி நடத்துவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் வாழ்கிறோம்.


ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.


உரும்பிராய் மேற்கு, மூன்று கோயிலடி. - பிள்ளைகள்

(14535)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 13 ஐ அமுல்படுத்த வேண்டாம் எனக் கோரி திருத்த பிரதியை தீயிட்டு எரித்த பிக்குகள்





(கொழும்பு)

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் தீர்மானத்திற்கு எதிராக பிக்குகளினால் நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பௌத்த பிரிவினரை பிரதிநிதித்து வப்படுத்தும் தீவிர தேசியவாத பௌத்த மதகுருமார்களின் குழுவினரால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேவேளை இந்தப் போராட்டத் தின் போது 13 ஆவது அரசியலமை ப்பு திருத்த பிரதியை பிக்குகள் தீ வைத்து எரித்தனர். ஒரு வார காலத் திற்குள் தமக்கான தீர்வு கிடைக்கா விட்டால் ஆயிரக்கணக்கான பிக்கு மாரை ஒன்றிணைத்து மிகிந்தலை யில் இருந்து பாரிய ஆர்ப்பாட்டம் முன் னெடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுத்தனர். (நி)

# சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்திற்கு உத்தரவாதத்தினை வழங்கியது பாரிஸ் கிளப்

(கொழும்பு)

**இலங்கைக்கான கடன் உதவிகளை சர்வதேச நாணய நிதியம் வழங்குவதற்கான உத்தரவாதத்தை தாம் வழங்குவதாக பாரிஸ் கிளப் நாடுகள் அறிவித்துள்ளன. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர் கடனை பெற்றுக் கொள்வதற்கு இந்த உத்தரவாதம் மிக முக்கியமானதாகும்.**

இலங்கையின் நீண்டகால கடன் நிலைத்தன்மை உட்பட இலங்கையின் பெரிய பொருளா தார மற்றும் நிதி நிலைமையை ஆராய்ந்த பின்னர் இதனை அறிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத் தின் ஆதரவுடன் கூடிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத் தவும் ஏனைய கடன் வழங்கு நர்களுடனான பேச்சுக்கு ஆதர வளிக்கவும் தீர்மானித்துள்ளன.

இலங்கையின் கடன் மறுசீர மைப்பு தொடர்பில் பேச்சுவார்த் தைகளை மேற்கொள்வதற்கான தங்கள் அர்ப்பணிப்பை பாரிஸ் கிளப் நாடுகள் வெளியிட்டுள்ளன. அத்தோடு இந்தியா வழங் கிய குறிப்பிட்ட மற்றும் நம்பக மான நிதி உத்தரவாதங்களு க்கும் பாரிஸ் கிளப்புடனான ஒத்துழைப்பிற்கும் உறுப்பினர்கள் மேலும் பாராட்டு தெரிவித்தனர்.

இதேநேரம் ஹங்கேரி, சவுதி அரேபியா, சீனா உட்பட இலங் கைக்கு கடன் வழங்கிய ஏனைய தரப்பினரும் இவ்வா றான செயற்பாட்டினை முன்னெ டுக்க வேண்டும் என வலியுறுத் தியுள்ளன. (நி)

# கொள்கை பிரகடன உரை நிகழ்வை புறக்கணித்த எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன் றத்தின் நான்காவது அமர்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வினை பிரதான எதிர்க்கட்சிகள் புறக்கணித் துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் டலஸ் அழகப்பெரும தலைமை யிலான தரப்பினரும் விமல் வீர வன்ச தரப்பினரும் இந்த நிக ழ்வை புறக்கணித்திருந்தனர்.

இதேவேளை நேற்று இடம் பெற்ற சம்பிரதாய நிகழ்வில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக் கள் சக்தியும் கலந்து கொள்ள வில்லை.

இருப்பினும் சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களோடு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் உறுப்பினர்களும் சி.வி.விக்னே ஸ்வரனும் கலந்து கொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# துருக்கி-சிரியா நிலநடுக்கம்; 10 ஆயிரத்தை அண்மித்த உயிரிழப்புகள்

(அங்காரா)

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 9,600 ஐ கடந்துள்ளது.

இடிபாடுகளில் சிக்கியுள்ள வர்களை மீட்கும் பணிகளுக்கு முன்னுரிமையளித்து மீட்புக் குழுவினர் தொடர்ச்சியாக மீட்புப் பணிகளை முன்னெடுத்து வரு கின்றனர்.

மீட்புப் பணிகளில் ஏற்பட்டு ள்ள தாமதம் காரணமாக உயி ரிழப்பு எண்ணிக்கை அதிகரிக் கும் எனவும் அஞ்சப்படுகி றது. (நி)

# மார்ச் மாதம் சீருடைகளை வழங்க நடவடிக்கை

## கல்வி அமைச்சர்

(கொழும்பு)

மாணவர்களுக்கான பாட சாலை சீருடைகளை மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக் கப்படும் என கல்வி அமை ச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்துள்ளார்.



எதிர்கால கல்வி அபிவிரு த்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக கல்வி அமைச் சில் நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை இடம்பெற்ற கூட்டத்தின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேவையான சீருடைக ளில் எழுபது சதவீதத்தை வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட சீன அரசாங்கம், ஏற்கனவே தனது முதல் தொகுதியை அனுப்பியுள்ளதாகவும் எஞ் சிய முப்பது சதவீதத்தை உள் ளூர் தனியார் வர்த்தகர்கள் வழங்குவதாகவும் அமை ச்சர் தெரிவித்துள்ளார். (நி)

# முத்திரை விற்பனை அதிகரிப்பு

(கொழும்பு)

முத்திரைகளின் விலை அதிகரித்துள்ள போதிலும் முத்திரைகளின் விற்பனை யும் அதிகரித்துள்ளதாக தபால் திணைக்களம் தெரி வித்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு டன் ஒப்பிடும் போது முத் திரை விற்பனை மூலம் கிடைத்த வருமானம் கடந்த ஆண்டு (2022) ஒகஸ்ட் முதல் டிசெம்பர் 31 வரை 742 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளதாக பதில் தபால் மா அதிபர் தெரிவித்து ள்ளார்.

தகவல் தொழில்நுட்பத்து டன் தபால் திணைக்களம் முன்னோக்கி நகர்ந்து வருவ தாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (நி)

# பூகம்பத்தைத் தொடர்ந்து துருக்கி துறைமுகத்தில் தீ



(அங்காரா)

பூகம்பத்தைத் தொடர்ந்து துருக்கி துறைமுகத்தில் தீ விப த்து ஏற்பட்டுள்ளது. பூகம்பத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான துரு க்கியில், மத்திய தரைக் கடலில் உள்ள இஸ்கெண்டருன் துறை முகத்தின் ஒரு பகுதியில் கடந்த திங்கட்கிழமை தீப்பிடித்தது. அங்கு எரிந்துபோன கொள் கலன்களில் இருந்து பெருமள வில் கரும் புகை வெளியானது.

அங்கு தொடர்ந்து நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக தீயை அணைக்கும் பணியில் துருக்கிகடலோரக்காவல்படைக் கப்பல் உதவி வருவதாக தகவ ல்கள் தெரிவிக்கின்றன.

பூகம்பத்தின்போது கீழே விழுந்த கொள்கலன்களால் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு எதிரான தொடர்

# ஹசில்வுட் விலகல்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் ஜோஷ் ஹசில்வுட்டுக்கு கடந்த மாதம் சிட்னியில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் போது இடது கணுக் கால் பகுதியில் காயம் ஏற்பட்டது.

அதில் இருந்து அவர் இன்னும் முழுமையாக மீளவில்லை.

இதனால் அவர் இந்தியாவுக்கு எதிராக வருகிற நாளை மறுதினம் நாக்பூரில் தொடங்கும் முதலாவது டெஸ்டில் விளையாட வாய்ப்பில்லை என்பது உறுதியாகியுள்ளது.

ஏற்கனவே காயம் காரணமாக வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் முதலாவது டெஸ்டில் ஆடவில்லை.

ஓல் ரவுண்டர் கேமரூன் கிரீனும் விரல் காயத்தால் பந்து வீச முடியாத நிலை மையில் தவிக்கிறார்.

இப்போது ஹசில் வுட்டும் விலகுவது அந்த அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (4)

# துருக்கி நிலநடுக்கத்தில் கால்பந்து வீரர் பலி



துருக்கியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சகல விளையாட்டுக்கள் மற்றும் நிகழ்வுகளையும் இரத்து செய்யுமாறு அந்த நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

மறுஅறிவித்தல் வரை சகல போட்டிகளும் இரத்து செய்யப்படுவதாக தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

சகலவிதமான உதைபந்தாட்ட போட்டிகளும் இரத்து செய்யப்படுவதாக துருக்கி உதைபந்தாட்ட சம்மேளனம் முன்னதாக அறிவித்திருந்தது.

இதேவேளை துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி அந்நாட்டு உதைபந்தாட்ட அணியின் கோல்கீப்பரும் யெனி மாலத்யஸ்போர் கழக அணி வீரருமான அஹ்மத் ஐயுப் துர்கஸ்லான் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பயிற்சிப் போட்டியில் இலங்கை மகளிர் வெற்றி

தென் ஆபிரிக்காவில் இன்னும் 3 தினங்களில் ஆரம்பமாகவுள்ள ஐ.சி.சி மகளிர் இருபது- 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் ஏ குழுவில் இடம் பெறும் இலங்கை மகளிர் அணி, தனது ஆரம்பப் பயிற்சிப் போட்டியில் அயர்லாந்து மகளிர் அணியை 2 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

கடைசிவரை மிகவும் பரபரப்பாக நடைபெற்ற அப்போட்டியில் கடைசி ஓவரில் அயர்லாந்தின் வெற்றிக்கு 4 ஓட்டங்கள் தேவைப்பட்டதுடன் இலங்கையின் வெற்றிக்கு 2 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட வேண்டி இருந்தது.

கடைசி ஓவரை மிகவும் துல்லியமாக வீசிய வேகப்பந்து வீச்சாளர் சுகந்திகா குமாரி ஒரு ஓட்டத்தை மாத்திரம் கொடுத்ததுடன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார். அவரது ஓவரின் 5 ஆவது பந்தில் அயர்லாந்தின் கடைசி விக்கெட் ரன் அவுட் முறையில் வீழ்த்தப்பட, இலங்கை 2 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (6)





கண்மணி




மணிமாறன்




சுபாஸ்கரன்




வனிதா




மேனன்




கிஷாலினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வரி அறவீட்டுக்கு எதிராக தொழில் வல்லுநர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

அரசாங்கத்தின்புதிய வருமான வரி முறைக்கு எதிராக ஒன்றிணைந்த தொழில் வல்லுநர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நேற்று கொழும்பு கோட்டை பகுதியில் இடம் பெற்றது. இதன் காரணமாக கொழும்பு கோட்டை பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் மற்றும் பதற்றமான நிலைமை காணப்பட்டது. (நி)

# கொள்கைப்பிரகடன உரை மீது இரண்டு நாள் விவாதம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் தொடர்பாக இரண்டு நாள் விவாதம் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு அண்மையில் கூடிய போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் நேற்று சம்பிரதாயபூர்வ நிகழ்வில் கலந்து கொள்ளாத ஐக்கிய மக்கள் சக்தி இந்த விவாதத்திலும் கலந்து கொள்வதில்லை என தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்க கொள்கை அறிக்கை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதம் இன்று மாலை 5 மணிவரை நடைபெறும்.

கொள்கைப் பிரகடனம் மீதான ஒத்திவைப்பு வேளை விவாதம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல்மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது. (நி)

# சுதந்திர தின நினைவு நாணயம் பிரதமருக்கு வழங்கப்பட்டது



(கொழும்பு)

இலங்கையின் 75 ஆவது சுதந்திர விழாவை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நினைவு நாணயம் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நினைவு நாணயத்தை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் வைத்து கையளித்ததாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

1000 ரூபாய் மதிப்பு கொண்ட இந்த நினைவு நாணயம் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 71 ஆவது நினைவு நாணயம்என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# புதிய வரிக்கொள்கையை எதிர்த்து தொழிற் சங்கப் போராட்டம்

## பல துறைகள் ஸ்தம்பிதம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக பல துறைகள் ஸ்தம்பித்துள்ளன.

சுகாதாரம், கல்வி, துறைமுகம், மின்சாரம், வங்கி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் தொழிற்சங்க நடவடிக்கைகளால் மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகினர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உட்பட மருத்துவத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று காலை 8 மணிமுதல் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதால் மருத்துவமனைகளின் மருத்துவ மற்றும் வெளி நோயாளர் பிரிவுகள் முற்றாக முடங்கியுள்ளன.

எவ்வாறாயினும், நாடளாவிய ரீதியில் உள்ள மகப்பேறு மற்றும் சிறுவர் மருத்துவமனைகள், புற்றுநோய் மருத்துவமனைகள், சிறுநீரக சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் முப்படை மருத்துவமனைகளில் இந்த வேலை நிறுத்தம் அமுல்படுத்தப் படவில்லை.

சுகாதாரப் பணிப்புறக்கணிப்பு காரணமாக மருத்துவமனைகளுக்கு வந்த மக்களும் சிரமப் பட்டனர்.

இதேவேளை, புதிய வரி முறைக்கு எதிராக மின்சாரம், நீர், துறைமுகம் மற்றும் எண்ணெய் துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களும் நேற்று சுகயீன விடுமுறையை அறிவிக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டன. (நி)

# அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் பணமில்லா சலுகைகள் தொடர்பில் சுற்றறிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சில பணமில்லா சலுகைகளுக்கு, உழைக்கும் போது செலுத்தும் புதிய வரி (PAYEE Tax) முறைமையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பணிப்புரையின் பேரில் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் இந்த சுற்றறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஊழியர்களுக்கு பணமல்லா சலுகைகளாக வழங்கப்படும் வாகனம், எரிபொருள் கொடுப்பனவு, வீடு, மருத்துவ வசதிகள் போன்றவற்றுக்கு இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. (நி)

# இரட்டைக் குடியுரிமையை கைவிடத் தயார்-பசில் அறிவிப்பு

(கொழும்பு)

இரட்டைக் குடியுரிமை தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்குமானால், அதனை கைவிட தயார் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை மட்டுமல்ல, மக்களுக்காகப் பணியாற்றுவதற்கு வேறு தடைகள் இருந்தாலும் அதனை கடந்துவர தயார் என்றும் கூறியுள்ளார்.

போராட்டத்தினால் பலர் தமது சொத்துக்களை இழந்துள்ள நிலையில் தனக்கு பெரும் பொறுப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

09.02.2023
தை 26, வியாழக்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 6.29 மணிவரை

உத்தரம் முன்னிரவு 9.21 மணிவரை
சுபநேரம் 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் 2.05-3.35 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம்
சதயம், பூரட்டாதி

**வளவன்**

**மேஷம்**
மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

**ரிஷபம்**
மனமகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்**
வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், நண்பர்களின் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்**
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் உங்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**
தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்**
நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**விருச்சிகம்**
சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள்.

**தனுசு**
தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்ப ஒற்றுமை கூடும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்**
குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்**
எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாக செயற்படுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மீனம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தி படைத்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்புறக்கணிப்பால் மருத்துவமனைகள் ஸ்தம்பிதம்

# சிகிச்சை பெறமுடியாமல் நோயாளர்கள் அவதி



யாழ்ப்பாணம்



வவுனியா



கிளிநொச்சி

(யாழ்ப்பாணம்)

நியாயமற்ற வரி கொள்கை உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கில் உள்ள பல்வேறு மருத்துவமனைகளின் மருத்துவர்கள் நேற்று புதன்கிழமை காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

குறித்த பணிப்புறக்கணிப்பு நேற்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் இன்று வியாழன் காலை 8 மணி வரையிலான 24 மணித்தியாலங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் எவையும் இடம்பெறவில்லை.

அதனால் தூரப் பிரதேசத்தில் இருந்து வந்த நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதோடு வெளி மாவட்டங்களில் இருந்து வந்த நோயாளர்களும் சிகிச்சை பெற முடியாத நிலையில் திரும்பிச் சென்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(நி-633-100-250-285-316)

## கல்வியங்காடு சந்தையில் திடீர் சோதனை 13 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு மீன் சந்தையில் அங்கீகரிக்கப்படாத, நிறுக்கும் கருவியை (தராசை) பயன்படுத்தி வியாபாரத்தில் ஈடுபட்ட 13 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு மீன் சந்தையில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் போது, வியாபார நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது, அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினரால் அங்கீகரிக்கப்படாத, வியாபாரத்திற்கு பயன்படுத்த முடியாத 13 நிறுக்கும் கருவிகளை வியாபாரிகள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட திணைக்களத்தினரால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (நி-6-33)



யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கட்டப்பட்ட சிறிசித்தி விநாயகர் ஆலயத்திற்கான மகாகும்பாபிஷேகம் நேற்று இடம்பெற்றது. யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சி.ஸ்ரீசற்குணராஜா உள்ளிட்ட பீடாதிபதிகள்.பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்.பல்கலைக்கழக மாண வர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(படம்- தேவானந்தன்)

## சைவப் புலவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது .

இவ்வழிகாட்டல் வகுப்புக்கள் பிரதி சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை இடம்பெறவுள்ளது . சைவப் புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கு ஏற்றவகையில் தனித் தனி வகுப்புக்களாக இலக்கணம், சாத்திரம், வரலாறு, உரைநடை, இலக்கியம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன.

எனவே பரீட்சைக்கு விண்ணப்பித்த சகல பரீட்சார்த்திகளையும் இவ் வழிகாட்டல் வகுப்பில் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (நி-6)

### புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

## ஈ.ரி.எப் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

2022 ஆம் ஆண்டில் 5 ஆம் வருட புலமைப்பரிசில் சித்தியடைந்த ஈ.ரி.எப் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு நிதி உதவி வழங்குவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வெட்டுப்புள்ளிக்கு மேலாக பெற்றுக் கொண்ட 2022 ஆம் ஆண்டில் 5 ஆம் வருட புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் ஒவ்வொரு பிள்ளைக்கும் பதினைந்தாயிரம் ரூபா பெறுமதியான ஒன்பதாயிரம் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபை தீர்மானித்துள்ளது.மேற்படி புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பப்படிவங்களை www.etfb.lk எனும் இணையத்தின் மூலமாகவும் மற்றும் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் இல.86 1/2, நாவலர் வீதி, வவுனியா இல. 69/1 மில் வீதி ஆகிய பிராந்தியங்களில் விண்ணப்பபடிவங்களை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 2023/03/10 திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் புலமைப் பரிசில் பிரிவு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை, மெஹ வரபியச, 19 ஆம் மாடி நாரஹேன்பிட்டி , கொழும்பு- 05 (த.பெ. இல: 807) எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## இணையவழி கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக கல்லூரி கற்கை நெறிகளும் வாய்ப்புக்களும் தொடர்பிலான மதியுரை கருத்தமர்வு நாளை வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு சிறகுகள் அமையம் - தமிழர் கல்வி மதியுரையகத்தின் ஏற்பாட்டில் இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதி பெறாத மாணவர்கள் உயர்கல்வியினை பல்கலைக்கழக கல்லூரியில் தொடர முடியும். குறித்த வாய்ப்புக்கள் தொடர்பில் யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் கருத்தமர்வில் இணைந்து கொள்வர்.

பல்கலைக்கழக கல்லூரி கற்கை நெறிகளுக்கான விண்ணப்ப இறுதித் திகதி இம் மாதம் 28 ஆம் திகதி ஆகும். கற்கை நெறிகள் தொடர்பிலான விபரங்களை www.ucj.ac.lk தளத்தில் பார்வையிட முடியும்.

கருத்தமர்வு நிகழ்வின் இணைப்பு Zoom Meeting Meeting ID: 823 4846 7118 | Passcode: 2023 (6)


### அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும்

## யாழ்ப்பாணக் கம்பன் விழா- 2023

**(முதலாம் நாள் நிகழ்வுகள்)**

**காலம்**
10.02.2023 வெள்ளி மாலை 4.30 மணி

**இடம்**
நல்லூர் ஸ்ரீ துர்க்கா மணிமண்டபம்

**மங்கல இசை**
திரு.பி.ரஜீவன் குழுவினர்

**மங்கல விளக்கேற்றல்**
பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா தம்பதியர்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தம்பதியர்
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கடவுள் வாழ்த்து**
திருமதி. சுகன்யா அரவிந்தன்

**தலைமையுரை**
ராகேஷ் நட்ராஜ்
(இந்தியத் துணைத்தூதுவர், யாழ்ப்பாணம்)

**தொடக்கவுரை**
சீ.வி.கே.சிவஞானம்
(அவைத்தலைவர், வட மாகாண சபை)

**ஆசியுரைகள்**
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீன முதல்வர்)
அருட்பணி ம.ஜெறோ செல்வநாயகம்
அஷ்ஷெய்க் மௌலவி எம். ஏ.பைஸர் (காசிமி, மதனி)
பொகவந்தலாவ இராகுல தேரர்

### இலக்கிய ஆணைக்குழு

**நடுவர்:**
'தமிழ்த்தென்றல்' முனைவர் இரா.மாது (தமிழ்நாடு)

**பொருள்:**
'அறிவைக் கடந்த உணர்வுச் செயற்பாட்டால்
வாசகர் மனதில் பெரிதும் உயர்ந்து நிற்பவன்'

பரதனே! - 'செஞ்சொற்செல்வர்' இரா.செல்வவடிவேல்
குகனே! -பேராசிரியர் தி.வேல்நம்பி
வாலியே! - ந.விஜயசுந்தரம்
கும்பகர்ணனே! - பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விவசாயிகளுக்கு வழங்கப்படவிருந்த பணம்
# அதிகாரிகளின் தவறுகளால் மீள அனுப்பப்பட்டது

**(கொழும்பு)**

**தவறான வங்கிக் கணக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டதன் காரணமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டவிருந்த 1300 மில்லியன் ரூபாய் பணம் மீள அனுப்பப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இந்த ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியின் கீழ் 12 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு ஹெக்டேயருக்கு 10,000 ரூபாய் வீதம் 8 பில்லியன் ரூபாயும் இரண்டு ஹெக்டேயருக்கு 20,000 ரூபாயும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தவறான கணக்கு இலக்கங்கள் காரணமாக இந்தப் பணம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகளின் தவறுகளினால் விவசாயிகளுக்கு பணம் கிடைக்காதது தொடர்பாக விசாரணை இடம்பெறுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## போராட்டத்தில் ஈடுபட்ட தேரர் கைது



(கொழும்பு)

பாராளுமன்ற நுழைவாயிலை மறித்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட பலாங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட இருவரை பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர். (நி)

# நியாயமற்ற வரிக் கொள்கையை எதிர்த்து வங்கி ஊழியர்கள் கவனயீர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம்



மன்னார்



வவுனியா

நாடு முழுவதும் நேற்று மதியம் 12.30 மணியுடன் வங்கி ஊழியர்கள் அரை நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். வங்கி ஊழியர்களின் சம்பளத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் நியாயமற்ற வரிக் கொள்கைக்கு எதிர்ப்பினை வெளியிடும் முகமாக இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த அரை நாள் வேலை நிறுத்தம் இடம்பெற்றது. (நி-6-33-250-285)

# காதலை எதிர்த்த சகோதரனை வெட்டிக் கொன்ற மாணவன்

## களுத்துறையில் சம்பவம்

(களுத்துறை)

காதலை எதிர்த்த சகோதரனை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் 14 வயதுடைய சிறுவனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேக்கவத்தை - பலாதொட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தந்தையை பார்ப்பதற்காக தாய் சென்றிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 26 வயதுடைய இளைஞரொருவரே கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை குறித்த சிறுவனின் காதல் விவகாரம் தொடர்பில் இவர்களுக்கிடையில் வாக்குவாதமொன்று இடம்பெற்றுள்ளதுடன், காதல் தொடர்பை துண்டிக்குமாறு மூத்த சகோதரன், சந்தேக நபரான இளைய சகோதரனை வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது வாக்குவாதம் முற்றியதையடுத்து 26 வயதான சகோதரன், பாடசாலை மாணவனான தமது சகோதரனை தாக்கிவிட்டு உறங்கச் சென்றுள்ளார்.

அதன்போது, சந்தேகநபரான சிறுவன், உறக்கத்தில் இருந்த தமது மூத்த சகோதரனை கூரிய ஆயுதத்தினால் கழுத்து பகுதியில் வெட்டிக் கொலை செய்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

9 ஆம் தரத்தில் கல்வி கற்கும் சந்தேகநபர் கைது செய்யப் பட்டதன் பின்னர் நேற்று சட்ட மருத்துவ பரிசோதனைக்காக முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவர் தற்போது களுத்துறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (நி)

# ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த இராணுவம் குவிப்பு



(கொழும்பு)

பல்வேறு தொழிற்சங்கங்கள் ஆரம்பித்துள்ள எதிர்ப்புப் பேரணிகள் காரணமாக கொழும்பு கோட்டையை சூழவுள்ள பகுதிகளில் அசாதாரண நிலைமைகள் ஏற்படுத்துவதனைத் தடுக்கும் வகையில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 4<br>கி.பா: சூரி.செவ் 11 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: மெக்கானிக்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்<br>தொ.இ: B/13309 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 19½ சூரி 6 செவ் 3 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கல்வியியற் கல்லூரி விஞ்ஞான ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உயர்பதவி<br>தொ.இ:G/13311 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 19 சூரி 9 செவ் 7 இல்<br>உயரம் : 165 cm<br>தகைமை/தொழில்: A/L தோட்டம் வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/13310 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: 18¼ சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 171 cm<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/13313 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: 55½ சூரி 1 செவ் 12 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்:Hardware Engineer (சொந்த ஸ்தாபனம்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13312 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: சூரி 8 செவ் 6 இல் உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/13315 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 2 செவ் 6 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L ஏற்றுமதிக் கம்பனியில் இயந்திர இயக்குநர் (அவுஸ்திரேலியா)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் இந்தியாதான் வரமுடியும்<br>தொ.இ: B/13314 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: சூரி 5 செவ் 6 இல்<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: BSc Software Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/13318 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின்

# பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 98





"சற்று முன்னால் நீ என்ன சொன்னாய்? ஏதோ முறையிட்டாயே? சிவிகை சுமக்கும் ஆட்களைப் பற்றி?"

காசிப்பட்டின் மென்மையும் கள்ளின் போதையும் காட்டுத் தேனின் இனிப்பும் கார்காலத்து மின்னலின் ஜொலிப்பும் ஒரு பெண் குரலில் கலந்திருக்க முடியுமா?.. அவ்விதம் இதோ கலந்திருக்கின்றனவே!

"பல்லக்கைக் கொண்டு வந்து அவர்கள் உன் குதிரை மீது மோதினார்கள் என்றா சொன்னாய்?"

பழுவூர் ராணியின் பவள இதழ்களில் தவழ்ந்த பரிகாசப் புன்னகை, அந்த வேடிக்கையை அவள் நன்கு இரசித்ததாகக் காட்டியது. இதனால் வந்தியத்தேவன் சிறிது துணிச்சல் அடைந்தான்.

"ஆம், மகாராணி! இவர்கள் அப்படித் தான் செய்தார்கள்! என் குதிரை மிரண்டு விட்டது!" என்றான்.

"நீயும் மிரண்டு போய்த்தானிருக்கிறாய். துர்க்கையம்மன் கோயில் பூசாரியிடம் போய் வேப்பிலை அடிக்கச் சொல்லு. பயம் தெளியட்டும்!"

இதற்குள் வந்தியத்தேவனுடைய பயம் நன்கு தெளிந்து விட்டது. அவனுக்குச் சிரிப்புக் கூட வந்து விட்டது.

பழுவூர் ராணியின் முகபாவம் இப்போது மாறிவிட்டது. குறுநகையின் நிலவு கோபக் கனலாயிற்று.

"வேடிக்கை அப்புறம் இருக்கட்டும் உண்மையைச் சொல். எதற்காகப் பல்லக்கின் மேல் குதிரையைக் கொண்டு வந்து மோதி நிறுத்தினாய்?"

இதற்குத் தக்க மறுமொழி சொல்லித்தான் ஆக வேண்டும். சொல்லா விட்டால்? நல்லவேளையாக, ஏற்கனவே அந்த மறுமொழி வந்தியத்தேவன் உள்ளத்தில் உதயமாகியிருந்தது.

சற்றுத் தணிந்த குரலில், பிறர் கேட்கக் கூடாது என்று வேண்டுமென்றே தணித்த அந்தரங்கம் பேசும் குரலில், "தேவி! நந்தினி தேவி! ஆழ்வார்க்கடியார் அவர் தான், திருமலையப்பர் தங்களைச் சந்திக்கும்படி சொன்னார். அதற்காகவே இந்தச் சூழ்ச்சி செய்தேன் மன்னிக்க வேண்டும்" என்றான்.

இவ்விதம் சொல்லிக் கொண்டே பழுவூர் ராணியின் முகத்தை வந்தியத்தேவன் கூர்ந்து கவனித்தான். தன்னுடைய மறுமொழியினால் என்ன பயன் விளையப் போகிறதோ என்னும் ஆவலுடன் பார்த்தான். கனி மரத்தின் மேல் கல் எறிவது போன்ற காரியந்தான்.

கனி விழுமா? காய் விழுமா? எறிந்த கல் திரும்பி விழுமா? அல்லது எதிர்பாராத இடி ஏதாவது விழுமா? பழுவூர் ராணியின் கரிய புருவங்கள் சிறிது மேலே சென்றன.

கண்களில் வியப்பும் ஐயமும் தோன்றின. மறுகணத்தில் அந்தப் பெண்ணரசி ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

"சரி நடுச்சாலையில் நின்று பேசுவது உசிதம் அல்ல. நாளைக்கு நம் அரண்மனைக்கு வா. எல்லா விடயமும் அங்கே விபரமாகச் சொல்லிக் கொள்ளலாம்" என்றாள். வந்தியத்தேவனுடைய உள்ளம் பூரித்தது. நினைத்த காரியம் வெற்றி பெற்று விடும் போல காணகிறது. ஆனால், முக்கால் கிணறு தாண்டிப் பயனில்லை. மற்றக் காற்பங்குக் கிணற்றையும் தாண்டியாக வேண்டும்.

"தேவி! தேவி! கோட்டைக்குள் என்னை விடமாட்டார்களே. அரண்மனைக்குள்ளும் விடமாட்டார்களே? என்ன செய்வது?" என்று பரபரப்புடன் சொன்னான்.

பழுவூர் ராணி உடனே பல்லக்கில் தன் அருகில் கிடந்த ஒரு பட்டுப் பையைத் திறந்து, அதற்குள்ளிருந்து ஒரு தந்த மோதிரத்தை எடுத்தாள்.

"இதை காட்டினால் கோட்டைக்குள்ளும் விடுவார்கள் நம் அரண்மனைக்குள்ளும் விடுவார்கள்" என்று சொல்லிக் கொண்டே கொடுத்தாள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### குதிரைக்கு லாயம்

(நேற்றைய தொடர்ச்சி)

"ஓ! இவன் சரியான முட்டாள் போலிருக்கிறது. இவனுக்கு எவ்வளவு தான் சொன்னாலும் கேட்டுக் கொள்ள மாட்டான்" என்று அவர் தலையில் அடித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

தானே பட்டு அனுபவித்தால்தான் தெரியும். 'பட்டறி கெட்டறி பத்தெட்டிறுத்தறி' என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டே அந்த வேதியர் போன, சில நிமிடங்களுக்கெல்லாம், கிளையோடு கீழே விழுந்து விட்டான் பேதை.

**வேதியர் சொன்ன ஆரூடம்**

மரக்கிளையோடு விழுந்த பேதைக்கு நல்ல வேளையாக பல மான அடி ஏதும் படவில்லை. என்றாலும் அந்த வேதியர் சொல்லி விட்டுப் போனது அவன் நெஞ்சில் சுருக் கென்றுபட்டது? "நான் கீழே விழுந்து விட நேரும் என்று விழுவதற்கு முன்பாக, முன் கூட்டியே எப்படியோ தெரிந்து வைத்துக் கொண்டு சொல்லி விட் டாரே! அவர் சிறந்த பண்டிதராகத்தான் இருக்க வேண்டும். இனி நடக்கப் போவதைச் சரியாகச் சொல்லக் கூடிய திறமை அவரிடம் ரொம்ப இருக்கிறது.

அவர் சொன்னால் பலிக்கிறது. அவரை விடக்கூடாது. அவரிடம் முக்கியமான ஓர் ஆரூடம் கேட்க வேண்டும்" என்று துடிப்போடு எழுந்து அவரைக் கூவியழைத்தபடியே ஓடினான் பேதை.

அந்த வேதியர் மெதுவாகத்தான் நடந்து கொண்டிருந்தார். ஆகவே அதிக தூரம் சென்று விடவில்லை அவர். தன் பின்னாலிருந்து கூவிக் கொண்டு வந்தவனைத் திரும்பிப் பார்த்தார்.

"அடடே! மரம் வெட்டிக் கொண்டிருந்த புத்தியில்லாத மிருகம் அல்லவா இவன்?" ஏன் என்னை [illegible] அவர் குழம்பினார். துஷ்டனைக் கண்டாலும் அறிவே இல்லாதவனைக் கண்டாலும் தூர விலகியிருக்க வேண்டும் என்பது அனைவருக்கும் தெரியும். என்ன செய்வது என்று யோசித்து ஒரு முடிவுக்கு வருவதற்குள் அவன் அவரை நெருங்கி விட்டான்.

பேதை அவரை நோக்கி, ஒரு பெரிய கும்பிடு போட்டான். அப்போது தான் அவருக்குச் சற்றுப் பயம் தெளிந்தது.

"ஐயா! நீ ஒரு பெரிய வித்துவான். சகல கலையும் தெரிந்த சாஸ்திரி. நீர் சொன்னபடியே நான் மரக் கிளையோடு சேர்ந்து கீழே விழுந்து விட்டேன். நல்ல வேளை தப்பித்தேன். உம் வாக்கு பலிக்கிறது. ஆகவே எனக்கு இன்னும் ஓர் ஆருடம் கூற வேண்டும்" என்று வேண்டினான் அவன்.

ஆருடமா? என்ன ஆருடம்?" அவர் புரியாமல் கேட்டார்.

"ஐயா! நான் பரமார்த்த குருவின் சிஷ்யன். அவர் மீது எனக்கு அதிக அன்பும் அக்கறையும் உண்டு. பாவம் அவருக்கு வயதாகி விட்டது. தளர்ச்சி வந்துவிட்டது. எனக்கென்னவோ பயமாயிருக்கிறது"

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்க முடியாது

# அதிகார பகிர்வையே கோருகிறோம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஒற்றையாட்சி அரச முறைமைக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள ·முடியாது. அர்த்தமுள்ள அதிகார பகிர்வை கோருகிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரையை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அக்கிராசன உரையில் பல விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏக்கிய ராஜ்ய என்ற சொற்பதத்தை பாவித்துள்ளார். அது ஒற்றையாட்சி முறைமையை குறிக்குமாயின் அதனை முழுமையாக புறக்கணிப்போம்.

அதியுச்ச அதிகார பகிர்வு என்று குறிப்பிட்டுக்கொண்டு ஒற்றையாட்சி முறைமைக்குள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு சாத்தியமற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போது சமஷ்டியாட்சி முறைமை தொடர்பில் குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அதிகார பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன இருப்பினும் அது வெற்றி பெறவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஓரிரு மாதங்களில் அதிகார பகிர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தார் இருப்பினும் கொள்கை உரையில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் குறிப்பிடப்படவில்லை. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தாவிட்டால் ஜனாதிபதி அரசியலமைப்பை மீறிவிட்டார் என்று கருதுவோம்.

ஒரு நாடு என்ற சொற்பதத்துக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்வோம், ஒற்றையாட்சி அரச முறைமைக்குள் தீர்வு என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் தீர்வுக்கான அகிம்சை வழியில் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார். (ம-7)

# 13 ஆவது திருத்தம் தொடர்பில் சிங்கள மக்கள் அஞ்ச வேண்டாம்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சகோதர சிங்கள மக்கள் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. மாகாணசபை முறைமை என்பது வடக்கு, கிழக்குக்கு மட்டும் உரித்தானது அல்ல. நாட்டில் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களும் அந்த முறைமையின் ஊடாக சிறந்த சேவையைப் பெறலாம் என்று இலங்கை தொழிலார் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையானது காலத்தின் கட்டாய தேவையாகும். அதிலுள்ள விடயங்களை அமுல்படுத்துவதற்கு காங்கிரஸ் முழு ஆதரவையும் வழங்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் கொள்கைத்திட்டத்தை முன்வைத்து நேற்று உரையாற்றினார். முக்கிய பல விடயங்களை எடுத்துரைத்திருந்தார்.

வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்ற முக்கிய விடயத்தையும் குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதி இவ்வாறு உரையாற்றும் போது 13 ஆவது திருத்தச் சட்டத் துக்கு எதிராக சிலர் கருத் துக்களை வெளியிட்டுள்ளனர்.

13 அநீதியானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர் எனினும் 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது வடக்கு, கிழக் குக்கு மட்டும் உரித்தானது அல்ல. இலங்கையில் உள்ள ஏனைய மாகாணங்களுக்கும் அதிகாரத்தை தரக்கூடிய பொறிமுறையாகும்.

அதன் மூலம் மக்கள் பிரச்சினைகளை இலகுவில் தீர்க்கலாம்.

எனவே, 13 குறித்து உருவாக்கப்பட்டுள்ள போலி விம்பத்தை சிங்கள மக்கள் நம்பக் கூடாது என்றார். (ம-7)

# வடக்கில் காணிகளை விடுவிக்க நடவடிக்கை

**– ஜனாதிபதி ரணில்**

(கொழும்பு)

வடக்கில் விடுவிக்கப்படாது உள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று அந்நிய கொள்கை விளக்க உரையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார் அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கில் காணி தொடர்பாக தீர்க்கப்படாத மேலும் பல பிரச்சினைகள் உள்ளதை நாம் அறிவோம். பலாலி முகாமுக்காக கையேற்கப்பட்டுள்ள சுமார் 100 ஏக்கர் காணிகள் அண்மையில் விடுவிக்கப்பட்டன. மேலும் பல ஏக்கர் காணிகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

அது தொடர்பாக இராணுவம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படுகிறது.

ஏனைய பாதுகாப்பு முகாம்களை அண்மித்த காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் காணிகள் தொடர்பில் பாரதுாரமான பிரச்சினை காணப்படுகிறது.

இதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் காடுகள் பற்றி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் விமானப்படை அடிப்படையாக கொள்ளப்பட்டது.

யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களால் காடுகளாக்கப்பட்ட கிராமங்களின் பல காணிகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் பெயரிடப்பட்டன.

தற்போது யுத்தம் முடிவடைந்துள்ளது. ஆனாலும் தமக்கு உரித்தான பல காணித் துண்டுகள் வனப்பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதால் மக்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

மொனராகலை தொடக்கம் யாழ்ப்பாணம் வரை மக்கள் இப்பிரச்சினையை எதிர்கொண்டுள்ளார்கள். 1985 ஆம் ஆண்டின் வரைபடத்தின் பிரகாரம் காடுகள் மற்றும் காணிகளை மீண்டும் வர்த்தமானியில் வெளியிட்டு இந்த அநீதியை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார். (ம-7)

# மின் வெட்டு தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பு நாளை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை காலத்தில் மின்சாரத்தை துண்டிக்க வேண்டாம் என இலங்கை மின்சார சபைக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரிட் மனு விசாரணைக்கு உட்படுத்தப்படுமா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பு நாளை 10ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீண்ட விசாரணைகளின் பின்னர், சோபித ராஜகருண மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற குழு இந்த உத்தரவை வழங்கியது.

அதன்படி, குறித்த மனு விசாரணைக்கு உட்படுத்தப்படுமா? இல்லையா? என்ற தீர்ப்பும் மனுவில் கோரப்பட்டுள்ள மின்வெட்டை தடுக்கும் இடைக்கால உத்தரவு மீதான முடிவும் அன்றையதினம் அறிவிக்கப்படவுள்ளது. (ம-7)

சுதந்திரம் சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை போதிக்கும் மதத்தை நான் நேசிக்கிறேன். *– டாக்டர் அம்பேத்கர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# கௌரவர் அழிவதுதான் நியதி என்றால்...

பாண்டவர்களுக்கு உரிமை வழங்க மறுத்த கௌரவர் தலைவன் துரியோதனன் தானும் அழிந்து தன் பரிவாரங்களையும் அழித்தான் என்கிறது மகாபாரதம்.

ஐந்து ஊர் அன்றி ஐந்து வீடாகிலும் பாண்டவர்களுக்கு வழங்குக என்று துரியோதனனிடம் கேட்டபோது, எதுவும் தரமுடியாது என்று அவன் கர்ச்சித்தான்.

அந்தக் கர்ச்சிப்புக்கு குருசேத்திரப் போர் பாடம் புகட்டியது.

அந்தோ துரியோதனாதியர் மாண்டு போயினர். பாண்டவர்கள் ஆட்சிப்பீடமேறினர் என்பதை மகாபாரத இதிகாசம் எடுத்துக்கூறுவதற்குள் இருக்கக்கூடிய தத்துவம் உணரப்பட வேண்டும்.

ஆம் அமைதி, சமாதானம், ஒற்றுமை என்பவற்றை ஆதரிக்காதவிடத்து அதனால் ஏற்படக்கூடிய அழிவு சாதாரணமானதாக இருக்காது என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

உண்மை. இனப் பிரச்சினைக்கான தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டமூலத்தைக் கூட அமுல்படுத்துவதற்குப் பௌத்த பீடங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

கடந்த காலங்களில் இனவாதத் தீயை மூட்டி அப்பாவித் தமிழ் மக்களை அழித்தொழிப்பதில் பெரும் பங்கு வகித்தவர்கள் பௌத்த பிக்குகள் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

சிறுபான்மை இனம் என்பதற்காகத் தமிழ் மக்களுக்கு இந்த நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்கள் செய்த நிட்டூரம் கொஞ்சமல்ல.

காலத்துக்குக் காலம் தமிழ் மக்கள் மீது இனவாதத் தீயைக் கக்கி தமிழ் மக்களைக் கருக்கிய கொடூரங்கள் இந்த நாட்டின் கறை படிந்த வரலாறுகள்.

நிலைமை இதுவாக இருக்கையில், தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய கொடும் போர் இந்த நாட்டின் செல்வத்தை – பொருளாதாரத்தை தின்று ஏப்பமிட, நாடு கந்தறுந்து உலகம் முழுவதும் பிச்சாடன பாத்திரம் ஏந்தும் அவலத்துக்கு ஆளாகியுள்ளது.

எனினும் அதுபற்றி இம்மியும் கருசனை கொள்ளாத பௌத்த பிக்குகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை – 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். அட்டகாசம் புரிகின்றனர்.

கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்ற வேண்டிய பௌத்த பிக்குகள் செய்கின்ற இந்த அக்கிரமம் நல்லதற்கல்ல.

13ஆவது திருத்தச் சட்டமூலம் என்பது பாண்டவர்கள் கேட்ட ஐந்து வீடுகளுக்குச் சமமானது. அப்படியிருந்தும் அதனையும் தரமறுக்கும் பௌத்த பிக்குகளின் ஆர்ப்பாட்டம் இந்த நாட்டை அழிப்பதற்கானதேயன்றி வேறில்லை என்பதுதான் உண்மை.

ஆம், நாடு அழிவதுதான் நியதி என்றால் அதனைத் தடுக்க யாரால்தான் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயாளர் நலன்கருதி

# பல்லவராயன்கட்டு - பாலாவி வீதியை தற்காலிகமாக புனரமைக்கக் கோரிக்கை



(அக்கராயன்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் குறித்த வேலை தொடங்கப்பட்டு இடை நடுவில் கைவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற ஆயிரம் வரையான குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளன.

கிளிநொச்சி பல்லவராயன் கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான வீதிப் புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டு உள்ளன.

புனரமைப்பிற்கென வீதியில் தோண்டப்பட்ட குழிகள் காரணமாக வேரவில் பிரதேச மருத்துவமனையின் நோயாளர் வண்டி விரைவாக முழங்காவில் ஆதார மருத்துவமனைக்கோ கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கோ செல்ல முடியாத நிலைமை காணப்படுவதோடு நோயாளர் வண்டி மூலம் கொண்டு செல்லப்படும் மகப்பேற்றிற்குரிய பெண்கள், ஆபத்தான நோயாளர்களை வேகமாக மேலதிக சிகிச்சைக்கு கொண்டு செல்ல முடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே இவர்களின் நலன் கருதி வேரவில் பிரதேச மருத்துவமனையில் இருந்து பல்லவராயன்கட்டுச் சந்தி வரை வீதிப் புனரமைப்பிற்காக சிதைக்கப்பட்டுள்ள வீதியினை தற்காலிக புனரமைப்பிற்கு உட்படுத்தி நோயாளர் வண்டி முழங்காவில், கிளிநொச்சி பகுதிகளுக்கு செல்வதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மாதர் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (நி-6-350)

# விவசாயக் காணிக்குள் யானை புகுந்து அட்டகாசம்



(நெளுக்குளம்)

வவுனியா அரசமுறிப்பு கிராமத்தில் விவசாய காணிகளுக்குள் நேற்று முன்தினம் யானை புகுந்து பயிர்களை நாசம் செய்துள்ளது.

குரக்கன், உழுந்து மற்றும் நெல் பயிரிடப்பட்ட காணிக்குள் வந்த யானை அங்கிருந்த பயிர்களை சேதப்படுத்தியதுடன் தென்னந் தோட்டத்திற்குள் தென்னைகளை முறித்தும் சென்றுள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். (நி-6-299)



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம், மன்னார் மாவட்டச் செயலக கைத்தொழில் அபிவிருத்தி சபை இணைந்து ஏற்பாடு செய்த தொழில் வழிகாட்டலுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வு நேற்று முன்தினம் மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்:-ஜோசப்நயன்)

# அம்பகாமம் கிராமத்திற்கு பேருந்து சேவை கட்டாயம் தேவை

## கிராம மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பகாமம் கிராமத்திற்கான இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை இடம்பெறுவதில்லை.

கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரினால் அம்பகாமம் கிராமத்திற்கு பாடசாலை மாணவர்கள் மாங்குளத்திற்கு வந்து திரும்பக்கூடிய வகையில் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை ஒன்றினை நடத்த வேண்டும் என மாவட்டச் செயலாளர் அறிவித்திருந்தும் இதுவரை பேருந்து சேவை இடம்பெறவில்லை.

அம்பகாமம், புலிமச்சிநாத குளம் ஆகிய கிராமங்களில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மாங்குளம் ஆதார மருத்துவமனைக்கே செல்ல முடியாத நிலையில் மக்கள் உள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறித்த சேவையை இடம்பெறச் செய்ய வேண்டும் என அம்பகாமம் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-350)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பிரதேச மருத்துவமனை நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 9 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு குறித்த மருத்துவமனை மண்டபத்தில் வை.சுப்பிரமணியம் தலைமையில் இடம் பெறவுள்ளது என அச்சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (4-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 150 | 140 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 250 |
| தக்காளி | 250 | 150 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 180 | 200 |
| கோவா | 60 | 60 | 100 | 150 |
| கரட் | 200 | 200 | 220 | 250 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 180 | 200 | 150 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 150 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 500 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 170 | 160 |
| பாகற்காய் | 250 | 180 | 280 | 400 |
| வெண்டக்காய் | 200 | 300 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 500 |
| லீக்ஸ் | 300 | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 160 | 120 |
| கறிமிளகாய் | 650 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 1600 | 1600 | 1000 | 1500 |
| போஞ்சி | 250 | 250 | 280 | 400 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | 100 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 60 | 100 |
| தேசிக்காய் | 50 | 60 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70 | 70-110 |
| இராசவள்ளி | 250 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 160 | 150 |
| முள்ளங்கி | 40 | 70 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 140 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 120 | 150 |

# மணவாளக் கோலம்

(யாழ்ப்பாணம்)

ஆதி மயிலிட்டி ஸ்ரீபூத நாயகி சமேத காசிப்பூதராய ஆலய மணவாளக் கோல நவோத்திர சகாப்திர 1008 சங்காபிஷேக விஞ்ஞாபனம் -2023 நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமாகி திருக்கல்யாண நிகழ்வும் திருவூஞ்சல் நிகழ்வும் நடைபெற்று காசிப்பூ தராய எம்பெருமான் வீதி வலம் வருவார் என நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (6)

# வட்டக்கச்சி விநாயகர் வீதியை சீர்செய்யுமாறு கோரிக்கை

(முறிகண்டி)

கிளிநொச்சி வட்டக்கச்சி விநாயகர் வீதியை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

குறித்த வீதியில் உள்ள 17 குடும்பங்களின் நாளாந்த போக்குவரத்துக்கு குறித்த வீதி உகந்ததாக இல்லை எனவும் 2010 மீள்குடியேறிய காலம் முதல் அவ் வீதியை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரிய போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை என மக்கள் கரைச்சி பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரைச்சி பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த வீதியை துரிதமாக அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து இதன்போது தவிசாளர் வேழமாலிகிதனிடம் மகஜரும் கையளிக்கப்பட்டது.

குறித்த வீதியை மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்தவர்கள் என பல்வேறு பட்டவர்கள் பயன்படுத்துவதுடன், மழைக் காலங்களில் அவ்வீதியைப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டினர். (நி-6-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிக்கொள்கை...

சீரமைக்கப்படும் என போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை இடம்பெற்ற ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரச நிறுவனங்கள் அனைத்தையும் மறுசீரமைக்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு கிடையாது. இருப்பினும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஒரு சில கடுமையான தீர்மானங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள 55 அபிவிருத்தித் திட்ட அலுவலகங்களை மூடுவதற்கும், 33 அபிவிருத்தி அலுவலகங்களின் செயற்பாடுகளை இடைநிறுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்காவிடின் அதன் சுமையை நாட்டு மக்கள் சுமக்க நேரிடும்.

பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்டு புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. வரி திருத்தங்கள் ஒரு தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

வரிக் கொள்கை வெகுவிரைவில் மறுசீரமைக்கப்படும். போராட்டத்தில் ஈடுபடும் உரிமை அனைத்து தரப்பினருக்கும் உண்டு. போராட்டங்கள் பிற தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும். தொழிற்துறையினருடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட தீர்மானித்துள்ளோம் என்றார். (ம-7)

## சமஷ்டியை...

கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

13வது திருத்தத்தை கொண்டு வருவது நல்லதுதான், ஆனால் அது நமது பிரச்சினைகளுக்கு தீர்வாகாது.

ஐக்கிய நாட்டில் பெரும்பான்மையான சிங்கள மக்களின் கருத்துக்களையே அரசாங்கம் எப்போதும் நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**கேள்வி** - 13ஆவது திருத்தத்தை கொண்டு வருவதாக அரசு வாக்குறுதியளித்துள்ளதா?

"வாக்குறுதிகள் கொடுத்தது உண்மைதான். அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றப் போகிறார்கள் என்பதும் உண்மைதான், ஆனால் நடுவில் என்ன நடக்கும் என்று தெரியவில்லை. இன்றுவரை அப்படித்தான் நடந்திருக்கின்றது. எந்தவொரு அரசாங்கமும் தீர்வுக்கான எதையும் செய்ய முற்படும்போது அதை எதிர்க்கட்சி ஏதாவது முறையில் தடுத்து விடுகின்றது. ரணில் விக்கிரமசிங்க 2001ஆம் ஆண்டு சந்திரிகா கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்திற்குள் அரசியலமைப்பை கிழித்து எரித்தார். ஒவ்வொரு முறையும் எதிர்க்கிறார்கள் கடைசியில் எமக்கு ஒன்றும் கிடைக்காது. ஆனால் தற் போது தருவதாகக் கூறியுள்ளனர்.

**கேள்வி** - நாட்டில் உள்ள எதிர்ப்பை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?

"யாருடைய எதிர்ப்பு"

கேள்வி - தேரர்களின்

"இவர்களெல்லாம் நாட்டை ஆள்பவர்களா? இல்லையே, ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகச் சொல்லலாம்.

**கேள்வி** - 13 ஐ கொண்டு வராமல் விடமாட்டீர்களா...?

நாங்கள் சமஷ்டி முறையை கண்டிப்பாக கொண்டு வருவோம் என்றார். (ம-7)

## சிறீதரன் எம்.பி...

எனக் குறிப்பிட்டு நேற்று புதன்கிழமை சிவகுரு ஆதீனத்தில் வைத்து வேலன் சுவாமிகளிடம் சிவில் உடையில் வந்தவர்கள் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி அழைப்பாணையை வழங்கியுள்ளனர்.

அதேவேளை குறித்த அழைப்பாணையில், சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக, சட்டவிரோத பேரணியில் கலந்து கொண்டவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ம-7,33)

## வடக்கில்...

படுத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "காங்கேசன்துறை துறைமுகம் நவீனமயப்படுத்தப்படும். விரிவாக்கப்படும். திருகோணமலையை நவீன சர்வதேச நகரமாக அபிவிருத்தி செய்யப்படும்.

மோதல்களுக்கு அகப்பட்டு பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பின்னடைந்த கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்காக விசேட அபிவிருத்தித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழ்ப்பாணக்..

பெறும் இவ்விழாவில், காலை நிகழ்வுகள் நல்லை ஆதீன மண்டபத்திலும் மாலை நிகழ்வுகள் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்திலும் இடம் பெறும்.

10, 11, 12 ஆகிய திகதிகளில் நடைபெறும் இவ்விழாவில் மங்கள இசை, இலக் கிய ஆணைக்குழு, பட்டிமன்றம், விவாத அரங்கு, வழக்காடு மன்றம் உள்ளிட்ட பல் விசேட நிகழ்வுகள் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## உச்ச அதிகாரங்...

இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், அது இன்று வரை வெற்றியளிக்கவில்லை.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரான இரா.சம்பந்தனும் தானும் 1977ம் ஆண்டு ஒரே சந்தர்ப்பத்திலேயே பாராளுமன்றத்திற்கு தெரிவானதாக கூறிய அவர், தம் இருவருக்கும் அன்று முதல் இன்று வரை கனவொன்று இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு நிலைபேறான தீர்வொன்றை பெற்றுக் கொடுப்பதே தமது கனவு என அவர் கூறுகின்றார்.

இதுவரை நடத்தப்பட்ட முயற்சிகள் வெற்றியளிக்காத போதிலும், இம்முறை எவ்வாறாயினும், அதனை வெற்றியடையச் செய்வதே தமது எதிர்பார்ப்பு எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இரா.சம்பந்தனும் நானும் 1977ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டோம். நம் இருவருக்கும் பொதுவான ஒரு கனவு உண்டு. நம் இருவரும் பாராளுமன்றத்தில் இருக்கின்றபோதே இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிலைபேறான ஒரு தீர்வை வழங்குதல் ஆகும். அக்கனவு பற்றி அன்று முதல் இன்று வரை நாம் கலந்துரையாடுகிறோம். முயற்சி செய்கிறோம்.

முன்னைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் இம்முறை எவ்வாறாயினும் அதனை வெற்றியடையச் செய்வதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். அதற்காக உங்கள் அனைவரது ஒத்துழைப்பினையும் நாம் எதிர்பார்க்கிறோம்" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ம-7)

## பொலிஸ் அதி...

விளக்கவுரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் காணி அதிகாரங்களோடு மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

"பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகள் தற்பொழுது மாகாண எல்லைகளின் பிரகாரம் காணப்படுவதில்லை. இதன்காரணமாக பிரயோக ரீதியான பல்வேறு சிக்கல்கள் உருவாகியுள்ளன. ஆகவே மாகாணங்களின் பிரகாரம் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரிவு எல்லைகளை நிர்ணயிப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம். என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 08/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1480
வெற்றி இலக்கங்கள்
தனுசு 1 3 1 0 3 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.08
சீட்டிழுப்பு இலக்கம் - 1055
K 10 32 47 80
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 3267
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
S 14 36 37 69
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 08/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1373
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
B 02 22 24 36 44

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 334
வெற்றி இலக்கங்கள்
விருச்சிகம் 07 33 36 39 விருச்சிகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/08
சீட்டிழுப்பு இலக்கம் 5025
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
Z 4 4 6 4 5 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2000
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.02.08
தினம் புதன்கிழமை
C 12 27 43 68
வெல்லப்பட்ட மொத்தம் பரிசுத் தொகை ரூ. 3,533,060/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.08
சீட்டிழுப்பு இல : 4161
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,670,940/-
வெற்றி இலக்கங்கள்
01 35 38 45 V
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2023-02-08
வெற்றி வாரம் 3712
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 32 45 49 59
கன்னி
6392
218
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,634,840/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 06 10 29 36 45
சீட்டிழுப்பு வாரம் 1176
இள நீலம்
2023.02.08 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 304,282,864.20
DLB
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1895
சீட்டிழுப்பு திகதி 2023-02-08
வெற்றி இலக்கங்கள்
10 23 32 43 W
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 39,794,787.60
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1826
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.02.08
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,659,460/-
வெற்றி இலக்கங்கள்
15 38 41 43 M
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD JAFFNA

கணித, விஞ்ஞானப் பிரிவுகள்

2023 A/L DAY CLASSES
(2022 பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

திங்கள் தொடக்கம் வெள்ளிவரை
நேரடி வகுப்புக்கள், நிகழ்நிலை வகுப்புக்கள்

- தமிழ் மொழி மூலம்
- ஆங்கில மொழி மூலம்

PHYSICS
G.PIRABA
R.RAGULAN

CHEMISTRY
S.T.UMASHANGAR
V. NANTHA

BIOLOGY
V.S.GUNASEELAN

COM.MATHS
P.SENTHILNATHAN
S.SIVAKARAN

ஆரம்பம் :- 21.02.2023 (செவ்வாய்க்கிழமை)
11.02.2023 தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படும்.
(14551)

தொடர்புகளுக்கு :-
076 569 3006 , 076 566 3006, 077 791 7611



வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகருக்கு அண்மையில் அரச உத்தியோகத்தர்கள் தங்குவதற்கு வீடு வாடகைக் குத்தேவை.

077 269 7211
077 407 2979
(14547)


# கோட்டாவிடம் வாக்கு மூலம்

(கொழும்பு)

முன்னாள்ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் 3 மணி நேர வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

போராட்டக்காரர்களினால் ஜனாதிபதி மாளிகையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாய் பணம்தொடர்பிலேயே இதன் போது வாக்குமூலம்பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மிரிஹானிலுள்ள இல்லத்திற்குச் சென்று வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் த்ந்து வாங்கப்படும். (14490)

076 825 7716 (ஆகாஸ்)



சுற்றுலா விசா சம்பந்தமான ஆலோசனைகள்

ஐரோப்பிய நாடுகளுக்கும், லண்டன், கனடாவுக்கு சுற்றுலா விசா தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
Hybrid International Hub (pvt) LTD (14533)
076 250 0098 / 021 222 1265



உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS


எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-5932)

வயது ~30 வயதிற்குட்பட்டோர்
(இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



சுய தொழில்வாய்ப்பு - நிறைந்த வருமானம்
V2 TRAVELS CHOLA FOODS உடன் இணைந்து
CHOLA INTERNATIONAL (PVT) LTD
புதிதாக ஆரம்பிக்கும் உணவுப்பொதிகள் விநியோகத்தில் உங்கள் பிரதேசத்திற்கான உணவுப்பொதிகள் விநியோகதாரராக நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்
பகுதிநேரமாக மாதம் 50'000/= மேல் சம்பாதிக்கலாம்
(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
ஆட்டோ/ மோட்டார் சைக்கிள்/சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
யாழ் மாவட்டத்தில் எப்பகுதியில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
(C-5932)
V2 TRAVELS 0777-068-777

பிறப்பு
14.10.1947

இறப்பு
07.02.2023

# மரண அறிவித்தல்

## சபாரட்ணம் அருளானந்தபிள்ளை (அருள்)

புதுவீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட சபாரட்ணம் அருளானந்தபிள்ளை (அருள்) அவர்கள் கடந்த 07.02.2023 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், செல்லத்துரை - சுகிர்தரத்தினம் தம்பதியரின் மருமகனும், ஜெயராணியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற சிவானந்தபிள்ளை, திருமலர், தெய்வேந்திரன் மற்றும் யோகமலர், திருலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தினேஸ், கீர்த்திகா, சபேசினி, திவியந்தன், கர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயரஞ்சிதமலர், ஜெயரூபி, ஜெயமாலினி, ஜெயசீலன், ஜெயகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் பிரகாஷ், நிஹாரா, கஜீபன் ஆகியோரின் மாமனாரும் கோவர்த்தன், சௌமியா, கரினேஸ், சைனப் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்
புதுவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலை அருகாமை)
(14550)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org